சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண்.410/2020

CNR No.TNSV030004472020

...

யூகோ வங்கி, சிவகங்கை கிளை,
அதன் கிளை மேலாளர் மூலம். ...வாதி

..எதிர்..

1) T. பிரியதர்ஷினி
2) தவசு
3) போதும்பொண்ணு ...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 26.11.2020-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25.02.2026 அன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்காக வந்த போது வாதிக்காக வழக்குரைஞர் திரு.எஸ்.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்காக வழக்குரைஞர் திரு.SPT.சேதுராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர்கள் ஆஜராகாததால் அவர்களை தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானித்தும் , வாதி தரப்பு வாதுரை கேட்டும் இதுநாள் வரை இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் தொகை ரூ.4,20,802/-ஐ செலுத்த வேண்டும் என்றும் மேற்படி அசல் தொகை ரூ.3,93,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தும் நாள் வரை 11.25 % வருட வட்டி சேர்த்து பிரதிவாதிகள் செலுத்தவேண்டும் என்றும் மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிராதின் சுருக்கம்-</u>

பிரதிவாதிகள் வாதி வங்கியை அணுகி கல்விக்கடன் வழங்கும்படி ரூ.3,90,900/-கடன் கேட்டு 08.10.2013-ம் தேதியன்று விண்ணப்பம் செய்தனர். பிரதிவாதிகளுக்கு வாதி வங்கி கடந்த 22.10.2013-ம் தேதியன்று ரூ.3,93,000/- கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடன் தொகைக்கு பிரதிவாதிகள் 11.25% வட்டி சேர்த்து செலுத்துவதாக ஒப்புக்கொண்டு 22.10.2013-ம் தேதியில் Agreement for Loan cum Hypothecation எழுதிக்கொடுத்துள்ளார்கள். பிரதிவாதிகள் மேற்படி கடனுக்கு ஆதரவாக வாதி வங்கிக்கு 30.09.2016 மற்றும் 26.07.2019 ஆகிய தேதிகளில் Acknowledgment Receipts-ம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டபடி வாதி வங்கியில் பெற்ற கடன் தொகையினை திருப்பி செலுத்தி வைக்காமல் வங்கியினை ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறார்கள். அதனால் பிரதிவாதிகள் அசல் மற்றும் வட்டியுடன் வரப்பெறுவதற்காக பிரதிவாதிகள் மீது தாவா அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்.</u>

பிரதிவாதிகள் கடன் வாங்கியது ஒப்புக்கொள்ளப்படுகிறது. Statement of Account-ல் கணக்கிடப்பட்டுள்ள வட்டி விகிதம் கூடுதலாக கணக்கிடப் பட்டுள்ளதால் அதுவும் Usurious Loan Act-ன் படி செல்லத்தக்கதல்ல. 16.08.2020-ம் தேதியில் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு செல்லவில்லை. அன்றைய தினம் யாதொரு Acknowledgment Receipt -ம் எழுதி தரவில்லை. கடந்த 22.10.2013-ம் தேதியில் வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்திருப்பதாக கூறுவதிலிருந்தே மேற்படி கடனுறுதி சீட்டு 22.10.2016-ம் தேதியிலேயே காலவாதியாகிவிட்டது. 30.09.2016, 26.07.2019 ஆகிய தேதிகளில் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு செல்லவில்லை. அன்றைய தேதியில் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு யாதொரு Acknowledgment Receipt எழுதிதரவில்லை. மேற்படி ஆவணங்களில் பிரதிவாதிகள் யாதொரு கையெழுத்தும் செய்யவில்லை. அதுவும் வாதி வங்கியில் போர்ஜரியாக உற்பத்தி செய்திருப்பதாலும் அதுவும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தக்

கூடியது அல்ல. தாவா கடனும் மாதத் தவணையில் பெறப்பட்டதாக கூறியிருப்பதில் மாதத்தவணை ரூபாய் எவ்வளவு என்பதோ, எத்தனை மாத தவணைகள் என்பதோ முதல் தவணை எந்த தேதியில் ஆரம்பிக்கிறதோ என்பதோ First instance of Default எந்த தேதி என்பது பற்றியோ துலக்காததால் தாவா பிராது Abuses of Process of Law படியும் தாவா வழக்கும் சட்டப்படி Material Irregularity of process of Law படியும் தாவா வழக்கும் நிலைநிற்கத்தல்ல. பிரதிவாதிகளும் 22.10.2013-ம் தேதிக்கு பிறகு வாதி வங்கிக்கு செல்லவில்லை. யாதொரு Acknowledgment Receipt -டோ, Revival லெட்டரோ எழுதி தராததால் தாவா கடனும் Limitation Act-ன் படி நசிந்து விட்டதில் தாவா வழக்கும் காலாவதி தோசத்தால் தாவா வழக்கும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. தாவா பிராது அமைப்பும் சரியல்ல. இந்த வங்கிக்கு யாதொரு வழக்கு மூலமும் கிடையாது. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. தாவா பிராதில் கண்டுள்ள வியாஜ்ஜிய மூலம் சுத்தப்பிசகு, வாதிகள் தஸ்தாவேஸ்து காலத்தில் குறிப்பிடப்படும் 30.09.2016-ம் தேதி இரு Acknowledgment Receipt பற்றியோ, 26.07.2019-ம் தேதிய இரு Revival லெட்டர் பற்றியோ வியாஜ்ஜிய மூலத்தில் குறிப்பிடாத நிலையில் தாவா பிராதும் சட்டப்படி நிலை நிற்கதக்கதல்ல. எனவே வாதியின் வழக்கை இந்த பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4. <u>பிரச்சினை</u>-

1) Whether the plaintiff is entitled for recovery as prayed for?

2) To what other relief the plaintiff is entitled to?

**5**) இவ்வழக்கில் வாதி வங்கியின் தரப்பில் வங்கியின் மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை. பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

6. <u>பிரச்சினைக்கான தீர்வு-</u>

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை கிளையில் அமைந்துள்ள யூகோ வங்கியால் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வங்கியில் 1ம்

பிரதிவாதியின் கல்விக்கட்டணம் செலுத்துவதற்காக கடன் பெறப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மற்றும் தாயாரான 2, 3 பிரதிவாதிகள் கடனை திரும்ப செலுத்துவதாக கூட்டாக கடன் ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளார்கள். அசல் மற்றும் வட்டி தொகைகளை திருப்பி செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ள 1 முதல் 3 பிரதிவாதிகள் கடனை திருப்பி செலுத்தவில்லை என்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வங்கிக்கு 22.10.2013 முதல் 20.08.2020 வரை அசல் மற்றும் வட்டியுடன் சேர்த்து ரூ.4,20,802/-செலுத்த வேண்டியுள்ளது என்றும் மேலும் தொடர்ச்சியாக வட்டியும் செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்பதும் வாதி தரப்பு வழக்காகும்.

7. வாதி தனது வழக்கினை வா.சா.1 வாய்மொழி சாட்சியம் வாயிலாகவும், வா.சா.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் வாயிலாகவும் எடுத்துரைத் துள்ளார். பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் கல்விக்கடன் கேட்டு 08.10.2013-ம் தேதியன்று வா.சா.ஆ.1 விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளனர். மேற்படி கடனுக்கு ஆதரவாக 22.10.2013-ம் தேதியில் கடன் ஒப்பந்தமும், 30.09.2016 மற்றும் 26.07.2019 ஆகிய தேதிகளில் ஒப்புகை ரசீதும் வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள். மேற்படி ஆவணங்களானது வா.சா.ஆ.2, வா.சா.ஆ.4 முதல் முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய தொகை குறித்த கடன் கணக்கு விபரம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8) பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதிகள் வாதி வங்கியில் கடன் பெற்றதை ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேலும் வட்டி விகிதம் கூடுதலாக கணக்கிடப் பட்டுள்ளதாகவும், 16.08.2020-ம் தேதியில் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு செல்லவில்லை என்றும் ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றும், கடனுறுதி சீட்டு காலவாதியாகிவிட்டதாகவும், ஆவணங்கள் வாதி வங்கியில் போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்டதாகவும் எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**9)** மேற்படி ஆவணங்களையோ அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்களையோ பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபணை எதுவும் எழுப்பப்படவில்லை. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதிகளால் வாதி வங்கிக்கு ஆதரவாக எழுதிக் கொடுக்கப்பட்டதாக வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். இந்த ஆவணங்களை சந்தேகிப்பதற்கு எந்த ஒரு முகாந்திரமும் இல்லை. ஆவணங்களுக்கு முரண்பட்ட சாட்சியங்கள் இல்லை. எனவே இந்த ஆவணங்கள் பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட சான்றாவணங்களாக இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

**10**. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் வழக்கை மறுத்து எவ்வித சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. அந்த வகையில் வாதியின் வழக்கு சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளத்தகுந்த வகையில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் வாதி வங்கியில் பெற்ற கடன் தொகைக்கு அசலையும் ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டித்தொகையுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**11**. மேலும் வாதி வங்கியில் 1ம் பிரதிவாதியின் படிப்பிற்காக பிரதிவாதிகள் கல்விக் கடன் பெற்றுள்ளார்கள். 2, 3 பிரதிவாதிகளின் மகள் 1ம் பிரதிவாதி ஆவார். 1ம் பிரதிவாதி அவரது வாழ்க்கையில் படித்து முன்னேறுவதற்காக மேற்படிப்பிற்காக வாங்கிய கல்விக்கடன் என வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களில் இருந்து பிரதிவாதிகள் வா.சா.ஆ.1-ன் மூலம் கடன் பெற்றுள்ளது நிரூபிக்கப் பட்டுள்ளதால் வாதி வங்கி கேட்டுள்ள வட்டி வீதத்தை குறைத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் பிராதில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு அசல் மற்றும் வட்டியுடன் திருப்பி செலுத்தவேண்டும் என இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, வாதி வங்கிக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் தொகை ரூ.4,20,802/-ஐ செலுத்த வேண்டும் என்றும் மேற்படி அசல் தொகை ரூ.3,93,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் தொகை முழுவதும் செலுத்தும் நாள் வரை 6% வருட வட்டியுடனும் மற்றும் வழக்குச் செலவுத் தொகையுடனும் திருப்பி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.03.10 17:36:08 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

**<u>வாதி தரப்பு சாட்சி-</u>**

வா.சா.1 - ஜானி வினோத்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்-</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 - | 08.10.2013- | கடன் விண்ணப்பம் | - அசல் |
| வா.சா.ஆ.2 - | 22.10.2013- | கடன் ஒப்பந்தம் | - அசல் |
| வா.சா.ஆ.3- | 22.10.2013 முதல் 20.08.2020 - | கடன் கணக்கு விபரம் | -உண்மை நகல் |
| வா.சா.ஆ.4 - | 30.09.2016- | ஒப்புகை ரசீது | -அசல் |
| வா.சா.ஆ.5 - | 26.07.2019 - | ஒப்புகை ரசீது | -அசல் |
| வா.சா.ஆ.6 - | 30.09.2016- | ஒப்புகை ரசீது | -அசல் |
| வா.சா.ஆ.7 - | 26.07.2019 - | ஒப்புகை ரசீது | -அசல் |
| வா.சா.ஆ.8 - | 30.09.2016- | ஒப்புகை ரசீது | -அசல் |
| வா.சா.ஆ.9 - | 26.07.2019 | ஒப்புகை ரசீது | -அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம்-</u>** இல்லை

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.03.10 17:36:13 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

Subordinate Court, Sivagangai
O.S.No.410/2020
**Draft/Fair Judgment**
10.03.2026